முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.No.08/2026**

in

**E.P.No.14/2017**

**in**

**O.S.No.236/2004**

குருவம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

சண்முகம் அம்மாள் (இறப்பு) ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

1. மாரியம்மாள்
2. மாரியம்மாள்
3. ஆனைமுத்து
4. சண்முகையா
5. காளி
6. பரமசிவன்
7. குருசாமிக்கோனார்
8. வெள்ளைச்சாமி ... எதிர்மனுதாரர்கள்/இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனுவானது 11.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத நிலையில் 11.02.2026 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 7, 8 எதிர்மனுதாரர்கள் பிரதான நிறைவேற்று மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:06:04 +0530

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் 151–ன்படி, பிரதான மனுவில் இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

இவ்வழக்கில் மனுதாரர் எதிர்மனுதார்கள் மீது சுவாதீனம் பெற வேண்டி E.P.No.14/2017 என்ற மனுவை தாக்கல் செய்து, மேற்படி மனுவும் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுவில் சுவாதீனம் எடுப்பதற்காக இந்நீதிமன்றம் உத்தரவிட்டு நீதிமன்ற அமீனா அவர்கள் சுவாதீனம் எடுக்க சென்றபோது தபசில் சொத்தில் பிரதான நிறைவேறுதல் மனுவில் சுவாதீனம் எடுக்க சென்றபோது மனு தபசில் சொத்து 14, 15, 16 அயிட்டங்கள் காரிசாத்தான் கிராமத்தில் இருந்து வரும் திருவேங்கடம் தாலுகாவில் மனு தபசில் சொத்து இருந்து வருகிறது என்று மேலெழுத்து செய்துள்ளார் என்றும், வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் காரிசாத்தான் கிராமம், சங்கரன்கோவில் தாலுகாவில் இருந்து வந்தது என்றும், தற்போது திருவேங்கடம் தாலுகாவாக பிரிக்கப்பட்டு, காரிசாத்தான் கிராமம் திருவேங்கடம் தாலுகாவில் ஆள்வரைக்கு உட்பட்டுள்ளது என்றும், ஆதலால் மனு தபசில் சொத்தில் 14, 15, 16 அயிட்டங்களை திருவேங்கடம் தாலுகாவில் இருப்பதாக சீர்திருத்தம் செய்துபோக வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், மேற்படி மனுவை சீர்திருத்தம் செய்வதினால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், பிரதான மனுவை சீர்திருத்த விவரப்படிக்கு சீர்திருத்தம் செய்வதால் மனுவின் தன்மையும் மூலக்கூறுகளும் மாறுபடக்கூடியதில்லை என்றும், ஆகையால், பிரதான மனுவில் இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி சீர்திருத்தம் செய்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:06:12 +0530

கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத நிலையில் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். மேலும், 7, 8 எதிர்மனுதாரர்கள் பிரதான நிறைவேற்று மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது பிரதான மனுவில் இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) E.P.No.14/2017 மனுவில் இந்நீதிமன்றத்தால் 27.11.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை செயல்படுத்த சென்ற இந்நீதிமன்ற அமீனாவால் "காரிசாத்தான் கிராமத்தில் உள்ள புல எண்கள்.890, 891, 892 ஆகிய புல எண்கள் கொண்ட கரிவலம்வந்தநல்லூர் எல்கைக்கு உட்பட்டது அல்ல இந்த புல எண்கள் திருவேங்கடம் வட்டத்தை சார்ந்தது என்று சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் சான்று கொடுத்துள்ளார். ஆகவே, இந்த புல எண்களை சுவாதீன வாழ்விப்பு செய்து கொடுக்க மார்க்கம் இல்லை" என தனது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் மனுதாரர் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் காரிசாத்தான் கிராமம், சங்கரன்கோவில் தாலுகாவில் இருந்து வந்தது என்றும், தற்போது திருவேங்கடம் தாலுகாவாக பிரிக்கப்பட்டு, காரிசாத்தான் கிராமம்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.12 17:06:20 +0530

திருவேங்கடம் தாலுகாவில் ஆள்வரைக்கு உட்பட்டுள்ளது என்றும், ஆதலால் மனு தபசில் சொத்தில் 14, 15, 16 அயிட்டங்களை திருவேங்கடம் தாலுகாவில் இருப்பதாக சீர்திருத்தம் செய்துபோக வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) மனு தபசில் 14, 15, 16 அயிட்டங்களை சொத்துக்கள் திருவேங்கடம் தாலுகாவில் இருப்பதாக நீதிமன்ற அமீனாவால் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் சான்று மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபணை தெரிவிக்காமல் ஒருதலைபட்சமாகியுள்ளனர். இந்நிலையில், E.P.No.14/2017 மனுவை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை.

9) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

10) **<u>இறுதியாக:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:06:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:06:37 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

E.A.No.08/2026
in
E.P.No.14/2017
in
O.S.No.236/2004

**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 12.02.2026**